# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.149/2018
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W.5
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | சுகுமார் | -- | |
| Father's Name | காளிமுத்து | Calling | போட்டோ ஸ்டியோ |
| Village | கம்மப்பட்டி | Religion | இந்து |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 01st day of August 2025.

**முதல் விசாரணை**

நான் திருவில்லிபுத்தூர் தாலுகா கம்மபட்டியில் கண்ணன் காலணியில் குடியிருந்து வருகிறேன். நான் ஸ்ரீ குமரன் என்ற பெயரில் கலர் லேப் வைத்து வேலை செய்து வருகிறேன். 07.06.2018 ம் தேதி காலை 09.00 மணியளவில் நானும் எனது நண்பர் பாபு என்பவரும் செண்பகதோப்பு சென்று குளித்துவிட்டு திரும்ப வந்துக்கொண்டிருந்தபோது காலை சுமார் 11.30 மணியளவில் திருவில்லிபுத்தூர்–செண்பகதோப்பு ரோட்டில் கம்மந்தோப்பு அருகில் ஒரு இருசக்கர வாகனமும் ஒரு டிராக்டரும் விபத்து ஏற்பட்டு கிடந்தது. அந்த இடத்தில் காவல் ஆய்வாளரும் போலீசாரும் விசாரணை செய்துக்கொண்டிருந்தனர். அப்போது போலீசார் அந்த இடத்தில் வரைபடம் வரைந்துக்கொண்டிருந்தனர். அந்த வகைக்கு எங்கள் இருவரிடமும் போலீசார் கையெழுத்து வாங்கி கொண்டனர். நான் கையெழுத்து செய்த பார்வை மகஜர் அதசாஆ 2 ஆகும். மேற்படி பார்வை மகஜரில் நான் இரண்டவதாக கையொப்பம் செய்துள்ளேன். பாபு என்பவர் முதலவதாக கையொப்பம் செய்துள்ளார். மேற்படி பாபு என்பவர் 2019 ம் ஆண்டில் இயற்கை மரணம் அடைந்துவிட்டார். போலீசார் இது சம்பந்தமாக விசாரிக்கவில்லை

குறுக்கு விசாரணை

போலீசார் தயார் செய்த மகஜரில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று படித்து பார்த்தேன். விபத்து நடந்தது குறித்து வரைபடம் வரைந்ததாக கூறினார்கள். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை பார்த்தேன். அது ஒரு டிராக்டர் டிரைலர் மற்றும் இருசக்கர வாகனம் விபத்திற்குள்ளாகின. அதன் பதிவு எண்

மற்றும் கலர் தெரியாது. விபத்தில் சிக்கிய இறந்தவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் விபத்தில் யார் இறந்தார்கள் என்ற விபரம் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 01st day of August 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**